சாராம்சம்: இனிய குழந்தைகளே, உங்களுடைய கல்வி மற்றும் உங்களுடைய தெய்வீக நடத்தை இரண்டினதும் பதிவேட்டை வைத்திருங்கள். நீங்கள் ஏதேனும் தவறு இழைத்திருக்கிறீர்களா என்பதை ஒவ்வொரு நாளும் சோதியுங்கள்.

கேள்வி: எம் முயற்சியைச் செய்வதனால், குழந்தைகளாகிய நீங்கள் ஓர் இராச்சியத்திற்கான திலகத்தைப் பெறுகிறீர்கள்?

பதில்: 1.சதா கீழ்ப்படிவாக இருப்பதற்கு முயற்சி செய்யுங்கள். சங்கமயுகத்தில் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிபவர் என்ற திலகத்தை நீங்கள் கொடுத்துக் கொண்டால், இராச்சியத்திற்கான திலகத்தைப் பெறுவீர்கள். விசுவாசம் அற்றவராக இருப்பது என்றால், கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாதவர் என்று அர்த்தம். அத்தகையவர்களால் இராச்சியத் திலகத்தைப் பெற முடியாது. 2. சத்திரசிகிச்சை நிபுணரிடம் எந்த ஒரு நோயையும் மறைக்காதீர்கள். நீங்கள் எதனையேனும் மறைத்தால், உங்கள் அந்தஸ்து குறைக்கப்படும். தந்தையைப் போன்று, அன்புக்கடல் ஆகினால், நீங்கள் இராச்சிய திலகத்தைப் பெறுவீர்கள்.

ஓம் சாந்தி. ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளாகிய உங்களுக்கு விளங்கப்படுத்துகின்றார்: கற்பது என்றால் புரிந்து கொள்வது. இந்தக் கல்வி மிகவும் இலகுவானதும், மிகவும் உயர்வானதும், உங்களுக்கு உயர்ந்ததோர் அந்தஸ்தைக் கொடுக்கக்கூடியதும் என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் புரிந்து கொள்கின்றீர்கள். இக்கல்வியை நீங்கள் உலக அதிபதிகள் ஆகுவதற்காகக் கற்கிறீர்கள் என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் மாத்திரமே அறிந்திருக்கின்றீர்கள். எனவே கற்பவர்கள் பெருமளவு சந்தோஷத்தைக் கொண்டிருக்க வேண்டும். இது அத்தகைய மேன்மையானதொரு கல்வியாகும். இது கீதையின் அதே அத்தியாயம் ஆகும். இது சங்கமயுகமும் ஆகும். குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது விழித்தெழுந்து விட்டீர்கள், ஆனால் ஏனைய அனைவரும் இன்னமும் உறங்கிக் கொண்டிருக்கின்றார்கள். மக்கள் இன்னமும் மாயையின் உறக்கத்தில் இருக்கின்றார்கள் என்ற கூற்றும் உள்ளது. பாபா வந்து உங்களை விழித்தெழச் செய்துள்ளார். அவர் உங்களுக்கு ஒரேயொரு விடயத்தையே விளங்கப்படுத்துகின்றார்: இனிய குழந்தைகளே, முன்னைய கல்பத்தில் நீங்கள் செய்ததைப் போன்றே, நினைவு யாத்திரையின் சக்தியினால், உங்களால் முழு உலகையுமே ஆட்சிசெய்ய முடியும். தந்தை இதனை உங்களுக்கு ஞாபகப்படுத்துகின்றார். ஒவ்வொரு கல்பமும் நாங்கள் இந்த யோக சக்தியினால் உலக அதிபதிகள் ஆகுவதுடன், தெய்வீகக் குணங்களையும் கிரகிக்கின்றோம் என்பது குழந்தைகளாகிய உங்களுக்கு நினைவூட்டப்பட்டுள்ளது என்பதை நீங்கள் புரிந்து கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் யோகத்தில் முழுமையான கவனம் செலுத்த வேண்டும். இந்த யோக சக்தியினால் குழந்தைகளாகிய நீங்கள் இயல்பாகவே தெய்வீகக் குணங்களை விருத்தி செய்கின்றீர்கள். இது உண்மையிலேயே மனிதர்களில் இருந்து தேவர்களாக மாறுவதற்கான பரீட்சையாகும். நீங்கள் யோக சக்தியினால்

மனிதர்களில் இருந்து தேவர்களாக மாறுவதற்கே இங்கே வந்திருக்கின்றீர்கள். உங்கள் யோக சக்தியினால் முழு உலகமும் தூய்மையாக உள்ளது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அது தூய்மையாக இருந்தது, அது இப்பொழுது தூய்மை அற்றதாகி உள்ளது. முழுச் சக்கரத்தினதும் இரகசியத்தைக் குழந்தைகளான நீங்கள் புரிந்து கொண்டிருக்கின்றீர்கள் என்பதுடன், அது உங்கள் இதயங்களிலும் உள்ளது. ஒரு புதிய நபர் வந்தாலும், இவ்விடயங்கள் புரிந்து கொள்வதற்கு மிக இலகுவானவை. தேவர்களாகிய நீங்கள் பூஜிக்கத் தகுதியானவர்களாக இருந்தீர்கள், பின்னர் நீங்கள் தமோபிரதான் பூஜிப்பவர்கள் ஆகுகின்றீர்கள். வேறு எவராலும் இதனை உங்களுக்குக் கூற முடியாது. தந்தை உங்களுக்குத் தெளிவாகக் கூறுகின்றார்: அது பக்தி மார்க்கமாகும், இதுவோ ஞான மார்க்கமாகும். பக்தி இப்பொழுது கடந்ததாகி விட்டது. கடந்த காலத்தின் விடயங்களை நினைவு செய்யாதீர்கள். அவை உங்களை விழச் செய்வதற்கான விடயங்களாகும். தந்தை இப்பொழுது மேலே ஏறுவதற்கான விடயங்களையே உங்களிடம் கூறுகின்றார். குழந்தைகளாகிய நீங்கள் நிச்சயமாகத் தெய்வீகக் குணங்களைக் கிரகிக்க வேண்டும் என்பதை அறிந்திருக்கின்றீர்கள். நீங்கள் உங்கள் அட்டவணையை ஒவ்வொரு நாளும் எழுத வேண்டும்: நான் எவ்வளவு நேரம் நினைவில் நிலைத்திருந்தேன்? நான் என்ன தவறுகள் செய்தேன்? ஒருவர் தான் செய்யும் தவறுகளினால் மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றார். அந்தக் கல்விகளில், ஒருவரின் நடத்தையும் கருத்தில் கொள்ளப்படுகின்றது. இங்கேயும், உங்கள் நடத்தை கவனிக்கப்படுகின்றது. தந்தை மாத்திரமே இதனை உங்கள் நன்மைக்காக உங்களுக்குக் கூறுகின்றார். இங்கும், நீங்கள் எப்படிக் கற்கின்றீர்கள் என்பதற்காகவும், உங்கள் நடத்தைகளுக்காகவும் ஒரு பதிவேடு வைக்கப்படுகின்றது. இங்கேயும், குழந்தைகளின் நடத்தைகள் தெய்வீகமாக ஆக்கப்படல் வேண்டும். நீங்கள் தவறு செய்யாதிருப்பதில் அவதானமாக இருக்க வேண்டும். நான் எந்தத் தவறும் செய்யவில்லை, இல்லையா? இதனாலேயே நீதிமன்றம் ஒன்று கூடுகின்றது. வேறு எந்தப் பாடசாலையிலும் நீதிமன்றம் ஒன்றுகூடுவதில்லை. உங்கள் இதயத்தை நீங்கள் கேட்க வேண்டும். மாயையினால் ஏதோவொரு கீழ்ப்படிவின்மையின் வடிவம் உள்ளது எனத் தந்தை விளங்கப்படுத்தி உள்ளார். ஆரம்பத்திலும் நீதிமன்றம் கூடுவதுண்டு. குழந்தைகள் உண்மையைக் கூறுவார்கள். தந்தை தொடர்ந்தும் உங்களுக்கு விளங்கப்படுதுகின்றார்: நீங்கள் உண்மையைக் கூறாது விட்டால், அப்பொழுது அந்தத் தவறுகள் தொடர்ந்தும் அதிகரிக்கும், அப்பொழுது எக்காரணமும் இல்லாமல் உங்கள் தவறுகளுக்காக நீங்கள் மென்மேலும் தண்டனையைப் பெறுவீர்கள். உங்கள் தவறுகளை நீங்கள் பாபாவிடம் கூறாததால், கீழ்ப்படிவு அற்றவராக இருக்கின்றமைக்கான திலகத்தைப் பெறுகிறீர்கள். அதன்பின்னர் உங்களால் இராச்சியத்திற்கான திலகத்தைப் பெற முடியாது. நீங்கள் கட்டளைகளுக்கு கீழ்ப்படியாது, விசுவாசம் அற்றவராக இருந்தால், உங்களால் இராச்சியத்தைப் பெற முடியாது. சத்திரசிகிச்சை நிபுணர் வெவ்வேறு வழிகளில் தொடர்ந்தும் உங்களுக்கு விளங்கப்படுத்துகின்றார். சத்திரசிகிச்சை நிபுணரிடம் இருந்து, உங்கள் நோயை மறைத்தால், உங்கள் அந்தஸ்து குறைவடையும். சத்திரசிகிச்சை நிபுணரிடம் கூறுவதனால், நீங்கள் அடிவாங்க மாட்டீர்கள். தந்தை கூறுவார்: எச்சரிக்கையாக இருங்கள்! அத்தகையதொரு தவறை நீங்கள் மீண்டும் செய்தால், உங்களுக்கு இழப்பே ஏற்படும்; உங்கள் அந்தஸ்து மிகவும் தாழ்ந்ததாக ஆகும். அங்கே, அவர்கள் இயல்பாகவே தெய்வீகச் செயற்பாடுகளைக் கொண்டிருப்பார்கள். இங்கே, நீங்கள் முயற்சி செய்ய

வேண்டும். நீங்கள் மீண்டும் மீண்டும் தோல்வி அடையக்கூடாது. தந்தை கூறுகின்றார்: குழந்தைகளே, எந்தத் தவறும் செய்யாதீர்கள். தந்தை பெருமளவு அன்புக் கடல் ஆவார். குழந்தைகளே, நீங்களும் அவ்வாறு ஆகவேண்டும். தந்தை எவ்வாறோ, குழந்தைகளும் அவ்வாறானவர்கள். அரசனும் அரசியும் எவ்வாறோ, பிரஜைகளும் அவ்வாறே. பாபா ஓர் அரசர் அல்ல. பாபா தன்னைப் போன்று, உங்களையும் ஆக்குகின்றார் என்பதை நீங்கள் அறிவீர்கள். தந்தையைப் பற்றிப் பாடப்படுகின்ற புகழே உங்களைப் பற்றிய புகழாகவும் இருக்க வேண்டும். நீங்கள் பாபாவிற்குச் சமமாக ஆக வேண்டும். மாயை மிகவும் சக்தி வாய்ந்தவள்: அவள் உங்கள் பதிவேட்டை நீங்கள் வைத்திருப்பதற்கு அனுமதிக்க மாட்டாள். நீங்கள் முற்றாக மாயையின் பிடியில் சிக்கியுள்ளீர்கள். உங்களால் மாயையின் சிறையில் இருந்து வெளிவர முடியாது. நீங்கள் உண்மையைக் கூறுவதில்லை. எனவே, தந்தை கூறுகின்றார்: மிகச்சரியானதொரு நினைவு அட்டவணையை வைத்திருங்கள். அதிகாலை எழுந்து பாபாவை நினைவு செய்யுங்கள். தந்தையை மாத்திரமே புகழுங்கள். பாபா, நீங்கள் எங்களை உலக அதிபதிகள் ஆக்குவதால், நாங்கள் உங்களையே புகழ்வோம். பக்தி மார்க்கத்தில் மக்கள் அதிகளவு புகழ் பாடுகின்றார்கள்; அவர்களுக்கு எதுவும் தெரியாது. தேவர்களுக்கான புகழ்ச்சி இல்லை. பிராமணர்களான உங்களைப் பற்றிய புகழே உள்ளது. ஒரேயொரு தந்தையே அனைவருக்கும் சற்கதியை அருள்பவர். அவரே படைப்பவரும், இயக்குனரும் ஆவார். அவர் சேவை செய்வதுடன், குழந்தைகளான உங்களுக்கும் விளங்கப்படுத்துகின்றார். அவர் அனைத்தையும் உங்களுக்கு நடைமுறையில் கூறுகின்றார். அம்மக்கள் சமயநூல்களில் உள்ள கடவுளின் வாசகங்களைத் தொடர்ந்தும் செவிமடுக்கின்றார்கள். அவர்கள் கீதையை வாசிக்கின்றார்கள், ஆனால் அதனூடாக அவர்கள் பெறுவதென்ன? அவர்கள் அமர்ந்திருந்து அதனை அதிகளவு அன்புடன் கற்கின்றார்கள்; அவர்கள் பக்தியைச் செய்கின்றார்கள். இருப்பினும், அதனூடாகத் தாம் எதனை அடைவோம் என்பதை அவர்கள் அறியார்கள். அவர்கள் தாம் தொடர்ந்தும் ஏணியில் இறங்குகின்றோம் என்பதை அறியாதுள்ளார்கள். நாளுக்கு நாள் அவர்கள் தமோபிரதான் ஆக வேண்டும்; அது நாடகத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ளது. தந்தையைத் தவிர வேறு எவராலும், இந்த ஏணியின் இரகசியத்தை உங்களுக்குக் கூற முடியாது. சிவபாபா மாத்திரமே பிரம்மாவினூடாக உங்களுக்கு விளங்கப்படுத்துகின்றார். இவரும் அவரினூடாகவே புரிந்துகொண்டு, பின்னர் உங்களுக்கு விளங்கப்படுத்துகின்றார். தந்தையே பிரதானமான, மூத்த ஆசிரியரும், சத்திரசிகிச்சை நிபுணரும் ஆவார். அவரை மாத்திரமே நீங்கள் நினைவுசெய்ய வேண்டும். அவர் உங்கள் பிராமண ஆசிரியரை நினைவு செய்யுமாறு உங்களிடம் கூறுவதில்லை. நீங்கள் அந்த ஒரேயொருவரை மாத்திரமே நினைவு செய்ய வேண்டும். எவர் மீதும் பற்று கொண்டிருக்காதீர்கள். ஒரேயொரு தந்தையிடம் இருந்து மாத்திரமே கற்பித்தல்களைப் பெறுங்கள். நீங்கள் பற்றில் இருந்தும் விடுபட வேண்டும். இதற்குப் பெருமளவு முயற்சி தேவை. நீங்கள் பழைய உலகம் முழுவதையிட்டும் ஆர்வமின்மையைக் கொண்டிருக்கின்றீர்கள். இந்த உலகம் ஏற்கனவே முடிவடைந்து விட்டது. உங்களுக்கு அதனிடத்தில் எந்த அன்போ அல்லது கவர்ச்சியோ இல்லை. அவர்கள் தொடர்ந்தும் பல்வேறு பெரிய கட்டடங்கள் போன்றவற்றைக் கட்டுகின்றார்கள். இப் பழைய உலகம் இன்னமும் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது அவர்களுக்குத் தெரியாது. குழந்தைகளாகிய நீங்கள்

விழித்தெழுந்துள்ளீர்கள், நீங்கள் பிறரையும் விழித்தெழச் செய்கிறீர்கள். தந்தை ஆத்மாக்களையே விழித்தெழச் செய்கின்றார். அவர் மீண்டும் மீண்டும் உங்களுக்குக் கூறுகின்றார்: உங்களை ஓர் ஆத்மா எனக் கருதுங்கள். உங்களைச் சரீரங்கள் எனக் கருதுவதால், நீங்கள் இன்னமும் உறக்கத்தில் இருப்பதைப் போன்றுள்ளது. உங்களை ஓர் ஆத்மா எனக் கருதுவதுடன், தந்தையையும் நினைவு செய்யுங்கள். ஓர் ஆத்மா தூய்மை அற்றவராக இருக்கும் பொழுது, ஒரு தூய்மையற்ற சரீரத்தையே பெறுகின்றார். ஓர் ஆத்மா தூய்மையாக இருக்கும் பொழுது, அவர் ஒரு தூய சரீரத்தைப் பெறுகின்றார். தந்தை விளங்கப்படுத்துகின்றார்: நீங்கள் அந்தத் தேவ குலத்திற்கு உரியவர்களாக இருந்தீர்கள், நீங்கள் மீண்டும் அவ்வாறே ஆகுவீர்கள். இது மிகவும் இலகுவானது! அத்தகைய எல்லையற்ற தந்தையை நாம் ஏன் நினைவு செய்யக்கூடாது? அதிகாலையில் விழித்தெழுந்து தந்தையை நினைவு செய்யுங்கள். பாபா, இது உங்கள் அற்புதம். நீங்கள் எங்களை அத்தகைய மேன்மையான தேவர்கள் ஆக்கிய பின்னர், நிர்வாணா தாமத்திற்குச் சென்று அமர்ந்து விடுகின்றீர்கள். வேறு எவராலும் எங்களை அந்தளவிற்கு மேன்மையானவர்கள் ஆக்க முடியாது. நீங்கள் அனைத்தையும் எங்களுக்கு மிக இலகுவாக கூறுகின்றீர்கள். தந்தை கூறுகின்றார்: உங்களுக்கு எப்பொழுது எல்லாம் நேரம் கிடைக்கின்றதோ, உங்கள் வேலைகளை நீங்கள் செய்யும் பொழுதும் கூட, உங்களால் தந்தையை நினைவு செய்ய முடியும். நினைவால் மட்டுமே உங்கள் படகைக் கரை சேர்க்க முடியும். அதாவது, அது உங்களை இந்தக் கலியுகத்தில் இருந்து சிவனின் தாமத்திற்கு அழைத்துச் செல்லும். நீங்கள் சிவனின் தாமத்தையும், சிவபாபா ஸ்தாபித்த சுவர்க்கத்தையும் நினைவுசெய்ய வேண்டும். எனவே, நீங்கள் இரண்டையும் நினைவு செய்கின்றீர்கள். நாங்கள் சிவபாபாவை நினைவு செய்வதனால், சுவர்க்க அதிபதிகள் ஆகுகின்றோம். இக் கல்வி புதிய உலகிற்கானது. தந்தை இங்கே புதிய உலகை ஸ்தாபிப்பதற்கே வருகின்றார். தந்தையும் நிச்சயமாக வந்து, ஏதோ ஒரு பணியைச் செய்வார். நான் நாடகத் திட்டத்திற்கு ஏற்ப, எனது பாகத்தை நடிப்பதை நீங்கள் பார்க்க முடியும். நான் குழந்தைகளாகிய உங்களுக்கு நினைவு யாத்திரையினதும், 5000 வருடங்களின் ஆரம்பம், மத்தி, இறுதியினதும் இரகசியத்தைக் கூறுகின்றேன். ஒவ்வொரு 5000 வருடங்களுக்கு ஒருமுறை பாபா தனிப்பட்ட வகையில் உங்கள் நேர்முன்னிலையில் வருகின்றார் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆத்மாவே பேசுகின்றார், சரீரம் பேசுவதில்லை. தந்தை குழந்தைகளாகிய உங்களுக்குக் கற்பித்தல்களைக் கொடுக்கின்றார்: ஆத்மாவே தூய்மையாக்கப்பட வேண்டும். ஒருமுறை மாத்திரமே ஆத்மா தூய்மையாக வேண்டும். பாபா கூறுகின்றார்: நான் பல தடவைகள் உங்களுக்குக் கற்பித்திருக்கின்றேன், மீண்டும் உங்களுக்குக் கற்பிப்பேன். எந்த ஒரு சந்தியாசியாலும் இவ்வாறு கூற முடியாது. தந்தை மாத்திரமே கூறுகின்றார்: குழந்தைகளே, நான் உங்களுக்கு நாடகத் திட்டப்படி உங்களுக்குக் கற்பிக்க வந்துள்ளேன், முன்னைய கல்பத்தில் வந்து, கற்பித்து இராச்சியத்தை ஸ்தாபித்ததைப் போன்றே, 5000 வருடங்களின் பின்னரும் அதேவழியில் நான் வந்து உங்களுக்குக் கற்பிப்பேன். நான் பல தடவைகள் உங்களுக்குக் கற்பித்து, இராச்சியத்தை ஸ்தாபித்திருக்கின்றேன். தந்தை விளங்கப்படுத்துகின்ற இவ்விடயங்கள் மிகவும் அற்புதமானவை. ஸ்ரீமத் மிகவும் மேன்மையானது. ஸ்ரீமத்தினூடாக மாத்திரமே நீங்கள் உலக அதிபதிகள் ஆகுகின்றீர்கள். அது மிகவும் உயர்ந்த அந்தஸ்தாகும். ஒருவர் மிகப் பெரிய

அதிர்ஷ்டலாபச் சீட்டை வெல்லும்பொழுது, அவரது புத்தி வீணாகி விடுகின்றது. சிலர் முன்னேறிச் செல்லும் பொழுது, நம்பிக்கை இழக்கின்றார்கள்: என்னால் இனியும் கற்க முடியாது. என்னால் எவ்வாறு உலக இராச்சியத்தை அடைய முடியும்? குழந்தைகளாகிய நீங்கள் பெருமளவு சந்தோஷத்தைக் கொண்டிருக்க வேண்டும். பாபா கூறுகின்றார்: எனது குழந்தைகளிடம் அதீந்திரிய சுகத்தைப் பற்றியும், சந்தோஷத்தைப் பற்றியும் கேளுங்கள்! நீங்கள் அனைவரிடமும் சந்தோஷமான விடயங்களைப் பற்றிக் கூறுவதற்கே செல்கின்றீர்கள். நீங்கள் உலக அதிபதிகளாக இருந்தீர்கள், அதன்பின்னர், 84 பிறவிகளை எடுத்த பின்னர், அடிமைகள் ஆகியுள்ளீர்கள். அவர்கள் "நான் உங்களுடைய அடிமை, நான் உங்களுடைய அடிமை" எனப் பாடுகின்றார்கள், தம்மைச் சீரழிந்தவர்கள் என அழைப்பதும், தம்மைச் சிறியவர்களாகக் கருதுவதும் மிகவும் நல்லது என அவர்கள் நம்புகின்றார்கள். தந்தை யாரெனப் பாருங்கள்! எவருக்குமே அவரைத் தெரியாது. உங்களுக்கு மட்டுமே இப்பொழுது அவரைத் தெரியும். பாபா வந்து உங்கள் அனைவருக்கும் விளங்கப்படுத்தி, உங்களை 'குழந்தாய், குழந்தாய்!' என்று அழைக்கின்றார். இது ஆத்மாக்களுக்கும் பரமாத்மாவிற்குமான சந்திப்பாகும். நாங்கள் அவரிடமிருந்து சுவர்க்க இராச்சியத்தைப் பெறுகின்றோம். கங்கை ஆற்றில்; நீராடுவதால், எவராலும் சுவர்க்க இராச்சியத்தைப் பெற முடியாது. நீங்கள் கங்கையில் பல தடவைகள் நீராடியிருக்கின்றீர்கள். உண்மையில், தண்ணீர் கடலிலிருந்தே வருகின்றது, ஆனால் இம் மழை எவ்வாறு பொழிகின்றது என்பதும் இயற்கையின் அற்புதமே. இந்த நேரத்தில் தந்தை அனைத்தையும் உங்களுக்கு விளங்கப்படுத்துகின்றார். ஆத்மாவே கிரகிக்கின்றார், சரீரம் அல்ல. 'உண்மையில், எவ்வாறாக இருந்த என்னை பாபா எவ்வாறாக ஆக்கியுள்ளார்" என நீங்கள் உணர்ந்து கொள்ள முடியும். தந்தை இப்பொழுது கூறுகின்றார்: குழந்தைகளே, உங்கள் மீது கருணை கொண்டிருங்கள். கீழ்ப்படிவு அற்றவர்களாக இருக்காதீர்கள். சரீர உணர்வு உடையவர் ஆகாதீர்கள். உங்கள் அந்தஸ்தை நீங்கள் காரணம் இல்லாமல் இழந்து விடுவீர்கள். ஆசிரியர் உங்களுக்கு விளங்கப்படுத்துவார். தந்தையே எல்லையற்ற ஆசிரியர் என்பதை நீங்கள் அறிவீர்கள். உலகில் பல மொழிகள் உள்ளன. ஏதேனும் அச்சடிக்கப்பட்டால், அவை அனைத்து மொழிகளிலும் அச்சடிக்கப்பட வேண்டும். நீங்கள் புத்தகங்களை அச்சடித்தால், அனைவருக்கும் ஒரு பிரதியை அனுப்புங்கள். ஒரு பிரதி நூலகத்திற்கும் அனுப்பப்பட வேண்டும். இதில் செலவு என்ற கேள்விக்கே இடமில்லை. பாபாவின் பொக்கிஷப் பெட்டி நன்றாக நிரம்பியே இருக்கும். உங்களுடன் பணத்தை வைத்திருந்து என்ன செய்வீர்கள்? நீங்கள் அதனை உங்களுடன் உங்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்லப் போவதில்லை. உங்களுடன் வீட்டிற்கு அதனை எடுத்துச் செல்வதாயின், அது சிவபாபாவின் யாகத்தில் இருந்து திருடிச் செல்வதைப் போன்றதாகும். அது பெரும் தவறாக ஆகிவிடும். எவருக்குமே அத்தகையதொரு புத்தி இல்லாதிருக்க வேண்டும். கடவுளின் யாகத்திலிருந்து திருடுபவரை விடவும் பெரிய பாவாத்மா எவரும் இருக்க முடியாது. அவர் முற்றிலும் சீரழ்ந்த ஸ்திதியை அடைவார். தந்தை கூறுகின்றார்: இவை அனைத்தும் நாடகத்தின் ஒரு பாகம். பின்னர் நீங்கள் ஆட்சி செய்வீர்கள், அவர்கள் பணியாட்கள் ஆகுவார்கள். பணியாட்கள் இல்லாது, எவ்வாறு ஓர் இராச்சியம் தொடரும்? அதேவழியில் ஸ்தாபனை நடைபெற்றுள்ளது. தந்தை இப்பொழுது கூறுகின்றார்: உங்களுக்கு நீங்கள் நன்மை செய்ய வேண்டுமாயின், ஸ்ரீமத்தைப் பின்பற்றுங்கள்! தெய்வீகக் குணங்களைக் கிரகியுங்கள்!

கோபப்படுதல் தெய்வீகக் குணமல்ல் அது அசுர குணம். ஒருவர் கோபப்பட்டால், அவரை நீங்கள் சாந்தப்படுத்த வேண்டும். அவருக்கு நீங்கள் பதில் அளிக்கக்கூடாது. ஒவ்வொருவரின் செயற்பாடுகளில் இருந்தும் உங்களால் புரிந்துகொள்ள முடியும். அனைவரும் அசுர குணங்களைக் கொண்டிருக்கின்றார்கள். ஒருவர் கோபப்படும் பொழுது, அவரது முகம் செப்பைப் போன்று சிவந்து விடுகின்றது. அவர்கள் தமது வார்த்தைகளினூடாகக் குண்டுகளை வீசுகின்றார்கள், அவர்கள் தமக்கு ஓர் இழப்பை ஏற்படுத்திக் கொள்வதுடன், அவர்களின் அந்தஸ்தும் குறைவடைகின்றது. உங்களுக்குப் புரிந்துணர்வு இருக்க வேண்டும். தந்தை கூறுகின்றார்: நீங்கள் செய்துள்ள பாவங்களை எழுதுங்கள். அதனைப் பற்றி நீங்கள் பாபாவிடம் கூறுவதனால், நீங்கள் மன்னிக்கப்படுவதுடன், உங்கள் சுமையும் இலேசாக ஆகுகின்றது. நீங்கள் பிறவிபிறவியாக விகாரத்தில் ஈடுபட்டிருந்தீர்கள். இந்த நேரத்தில் நீங்கள் எப்பாவத்தை செய்தாலும், நூறு மடங்கு தண்டனை சேமிக்கப்படும். தந்தையின் முன்னால் நீங்கள் ஒரு தவறைச் செய்தால், நூறு மடங்கு தண்டனை இருக்கும். நீங்கள் ஒன்றைச் செய்த பின்னர் அதனைப் பற்றி பாபாவிடம் கூறாது விட்டால், அது அதிகரிக்கும். தந்தை விளங்கப்படுத்துவார்: உங்களுக்கு ஓர் இழப்பை ஏற்படுத்தாதீர்கள். தந்தை குழந்தைகளாகிய உங்கள் புத்தியை மிகச் சிறந்ததாக ஆக்குவதற்கே வந்துள்ளார். நீங்கள் எந்த அந்தஸ்தைப் பெறுவீர்கள் என்பது அவருக்குத் தெரியும்; அதுவும் 21 பிறவிகளிற்கான விடயம் ஆகும். சேவை செய்கின்ற குழந்தைகளின் சுபாவம் மிக இனிமையாக இருக்க வேண்டும். சிலர் உடனடியாகவே தந்தையிடம் கூறுகின்றார்கள்: பாபா, நான் இந்தத் தவறைச் செய்தேன். பாபா அவர்களை இட்டு மகிழ்ச்சி அடைகின்றார். அவர் தந்தையும், ஆசிரியரும், குருவும் மூவரும் ஆவார். கடவுள் உங்களையிட்டுச் சந்தோஷம் அடையும் பொழுது, உங்களுக்கு வேறு என்ன வேண்டும்? இல்லாவிடின் மூவருமே குழப்பம் அடைவார்கள். அச்சா.

இனிமையிலும் இனிமையான, அன்புக்குரிய, எப்போதோ தொலைந்து இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் தாய், தந்தையாக இருக்கும் பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் காலை வந்தனங்களும். ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே சொல்கிறார்.

தாரணைக்கான சாராம்சம்:

1. ஸ்ரீமத்தைப் பின்பற்றுங்கள், உங்கள் புத்தி மிக நன்றாக இருக்கட்டும். எந்த ஒரு கட்டளையையும் மீறாதீர்கள். கோபப்பட்டு உங்கள் வார்த்தைகளினால் குண்டுகளை போடாதீர்கள். மௌனமாக இருங்கள்.
2. உங்கள் இதயத்தில் இருந்து ஒரேயொரு தந்தையைப் புகழுங்கள். இப் பழைய உலகின் மீது எந்தவொரு கவர்ச்சியையோ அல்லது அன்பையோ கொண்டிராதீர்கள். எல்லையற்ற ஆர்வமின்மையைக் கொண்டவராகி, பற்றிலிருந்து விடுபட்டிருங்கள்.

ஆசீர்வாதம்: நீங்கள் நினைவின் அடிப்படையில், மாயையின் குப்பைக்கு அப்பாற்பட்டு இருப்பதன் மூலம் சதா மலர்ச்சி நிறைந்தவர்களாக இருப்பீர்களாக.

என்ன சூழ்நிலை உங்களுக்கு முன்னால் வந்தாலும், அதைத் தந்தையிடம் விட்டுவிடுங்கள். உங்களின் இதயபூர்வமாக பாபா எனக்

கூறுங்கள், அந்தச் சூழ்நிலை முடிந்துவிடும். உங்களின் இதயபூர்வமாக பாபா என்ற வார்த்தையைக் கூறுவதே மந்திர வித்தை ஆகும். அனைத்திற்கும் முதலில், மாயை உங்களைத் தந்தையை மறக்கும்படி செய்கிறாள். ஆதனால், நீங்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். அப்போது நீங்கள் உங்களை ஒரு தாமரை போல் அனுபவம் செய்வீர்கள். நினைவின் அடிப்படையில், உங்களால் சதா மாயையின் பிரச்சனைகள் என்ற குப்பைக்கு அப்பாற்பட்டு இருக்க முடியும். அப்போது உங்களுக்கு ஒருபோதும் எந்தவிதமான குழப்பமும் இருக்காது. அத்துடன் சதா மலர்ச்சிநிறைந்தவராக இருக்கும் ஒரேயொரு மனோநிலையைக் கொண்டிருப்பீர்கள்.

சுலோகம்: தமது வாழ்க்கைகளில் தூய்மையின் தாரணையையும் தர்மத்தையும் கடைப்பிடிப்பவர்கள் மகாத்மாக்கள் ஆவார்கள்.

---ஓம் சாந்தி---

அவ்யக்த சமிக்ஞை: இந்த அவ்யக்த மாதத்தில், பந்தனத்திலிருந்து விடுபட்டிருந்து, ஜீவன் முக்தி ஸ்திதியை அனுபவம் செய்யுங்கள்.

உங்களை சகல பந்தனங்களில் இருந்தும் விடுவிப்பதற்கு, உங்களின் நடத்தையையும் உங்களின் கடுமையான சம்ஸ்காரங்களையும் மாற்றுங்கள். பந்தனங்களை உருவாக்குபவர்கள், தமது சொந்தப் பணியைச் செய்யட்டும், நீங்கள் உங்களின் சொந்தப் பணியைச் செய்யுங்கள். நீங்கள் அவர்களின் வேலையைப் பார்க்கும்போது, அதனால் பயப்படாதீர்கள். அவர்கள் தமது பணியை எந்தளவிற்கு விசையுடன் செய்கிறார்களோ, அந்தளவிற்கு நீங்கள் உங்களின் சொந்தப் பணியை உங்களுடன் விசையுடன் செய்யுங்கள். அவர்கள் தமது கடமையை எப்படிச் செய்கிறார்கள் என்று பார்க்கும் நற்குணங்களை எடுத்துக் கொள்ளுங்கள். அதனால் நீங்களும் உங்களின் சொந்தக் கடமையைச் செய்வீர்கள். பந்தனங்களில் இருந்து உங்களை விடுவிப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குங்கள்.